புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஏப்ரல் 11, 2024 • புரட்சி 24 • முழக்கம் 13 • விலை ரூ.3.00

# காங்கிரஸ் கட்சியின் ‘திராவிட’ வாக்குறுதிகள்!

## பாஜகவை வீழ்த்த வழிகாட்டும் ‘தமிழ்நாடு’

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி பெரியார் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி ஒரு நூற்றாண்டு ஆகிறது. அதன்பிறகு பெரியார் சுயமரியாதை இயக்கம் கண்டது முதல் இப்போது வரை தமிழ்நாடு அடைந்திருக்கிற சமூக வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி, கட்டமைப்பு வளர்ச்சி என அனைத்துக்குமே மையப்புள்ளி இடஒதுக்கீடுதான். அதனால்தான் இந்தியாவின் மற்றெந்த மாநிலங்களையும் விட இடஒதுக்கீடு, சமூக நீதி சிந்தனைகளில் இன்றளவிலும் தமிழ்நாடுதான் முன்னோடியாக இருக்கிறது. நீட், புதிய கல்விக்கொள்கை போன்ற பாஜகவின் சூழ்ச்சிகரமான திட்டங்களை உடனுக்குடன் எதிர்த்த ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். மதவாத வெறுப்புணர்வை உள்வாங்காத மாநிலம் தமிழ்நாடு. ஒட்டுமொத்தத்தில் சமூகநீதி களத்துக்கான சிந்தனைப் போக்கைக் கட்டமைக்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

தமிழ்நாட்டின் இந்த ‘திராவிட மாடல்’ சிந்தனைப்போக்குதான் பாஜகவுக்கு பெரும் நெருக்கடியாகவும், சவாலாகவும் இருந்து கொண்டிருக்கிறது. எனவே பாஜகவை வீழ்த்த இந்த சிந்தனைப்போக்கு கையிலெடுக்க தேவை ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் இருக்கிறது. இதை காங்கிரஸ் கட்சி நன்கு உணர்ந்திருக்கிறது என்பதை வெளிக்காட்டும் ஆவணமாக, அக்கட்சியின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குறுதிகள் அமைந்திருக்கின்றன. 5 தலைப்புகளில் 25 வாக்குறுதிகளை அளித்துள்ளது காங்கிரஸ் கட்சி. இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு இவ்வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

மாநில சுயாட்சி உரிமைகள், மாநிலங்களின் நிதி உரிமைகள், கல்வி உரிமைகளை பாதுகாப்பதற்கான வாக்குறுதிகளும் அளிக்கப்பட்டுள்ளன. அதிலும் மிகக் குறிப்பாக, மக்களின் உணவு- உடை- காதல் திருமணம் போன்ற தனிப்பட்ட உரிமைகளில் எக்காரணம் கொண்டும் அரசு தலையிடாது என்ற வெளிப்படையான அறிவிப்பும், கடந்த 10 ஆண்டுகால பாஜக ஆட்சியால் வெறுப்புப் பேச்சு, மதமோதல்கள், வெறுப்பு குற்றங்களை முடிவுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வாக்குறுதியும் இன்றைய சூழலில் இந்தியாவுக்கு மிக அவசியமான வாக்குறுதிகள். திராவிட இயக்கப் பார்வையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வாக்குறுதிகளை வரவேற்பதோடு, மக்களிடத்திலும் கொண்டு செல்வோம்.

### முக்கிய வாக்குறுதிகள்:

• ஏழைப் பெண்களுக்கு ஆண்டுக்கு ரூ.1 லட்சம்

• நீட், CUET தேர்வுகள் கட்டாயம் இல்லை. மாணவர் சேர்க்கையை மாநில அரசுகளே கடைபிடிக்கலாம்.

• 12-ஆம் வகுப்பு வரை கட்டாயக் கல்வி

• குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம்

• மத்திய அரசுப் பணிகளில் காலியாக உள்ள 30 லட்சம் இடங்கள் நிரப்பப்படும்.

• சாதிவாரி கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

• அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் ஒப்பந்த பணி முறை நீக்கப்படும்.

• அங்கன்வாடி ஊழியர்கள் இரட்டிப்பாக்கப்படும். கூடுதலாக 14 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்

• மனித கழிவுகளை மனிதரே அள்ளும் நடைமுறை ஒழிக்கப்படும்.

• 2025 முதல் ஒன்றிய அரசுப் பணிகளில் 50% பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்




• SC,ST,OBC பிரிவினருக்கான காலிப் பணியிடங்கள் ஓராண்டுக்குள் நிரப்பப்படும்.

• SC, ST, OBC மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை இரட்டிப்பாக்கப்படும்.

• பட்டியலின மாணவர்கள் மீதான துன்புறுத்தல்களைத் தடுக்க ‘ரோஹித் வெமுலா சட்டம்’ இயற்றப்படும்.

• தனியார் கல்வி நிறுவனங்களில் பட்டியலினத்தவர் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு வழங்க தனிச் சட்டம்.

• அரசு தேர்வுகள் விண்ணப்பக் கட்டணம் ரத்து செய்யப்படும்.

• முதியவர்கள், விதவைப் பெண்கள் மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியம் ரூ.1000 உயர்த்தப்படும்.

• 21 வயதுக்கு கீழே உள்ள விளையாட்டு வீரர்களுக்கு மாதம் ரூ.10,000 ஊக்கத்தொகை.

• மூத்த குடிமக்கள் பாதுகாப்பு சட்டத்தில் உள்ள குறைகளை களையும் வகையில் மறு ஆய்வு.

• அனைத்து மொழிகளிலும் பிரெய்லி மற்றும் சமிக்ஞை அங்கீகரிக்கப்படும்.

• அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை ஏற்படுத்தப்படும்.

• டிப்ளமோ முடித்த இளைஞர்களுக்கு பொதுத் துறையில் தொழில் பழகுநர் பயிற்சி.

• பழகுநர் பயிற்சி மேற்கொள்ள இளைஞர்களுக்கு ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் உதவித் தொகை.

• புதுச்சேரி, காஷ்மீருக்கு மாநில அங்கீகாரம்.

• ரயில்களில் மூத்த குடிமக்களுக்கான கட்டண சலுகை மீண்டும் வழங்கப்படும்.

• உயர்கல்வி செல்லும் மாணவர்களுக்கு ரூ.7.5 லட்சம் வரை கல்விக்கடன் வழங்கப்படும்.

• மார்ச் 2024 வரை பெறப்பட்ட அனைத்து கல்விக்கடன்களும் ரத்து செய்யப்படும் .

• பாஜக கொண்டுவந்த ஜி.எஸ்.டி. சட்டம் ரத்து செய்யப்படும். வணிகர்களுக்கு ஏற்ற புதிய ஜி.எஸ்.டி. (2.0) கொண்டுவரப்படும்.

• மீனவர்களுக்கு டீசல் மானியம் வழங்கும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

• 100 நாள் வேலை ஊதியம் ரூ.400-ஆக உயர்த்தப்படும். நகர்ப்புறங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

• ரூ.25 லட்சம் மதிப்புள்ள காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

• தேசிய கல்விக் கொள்கையை மாநில அரசுகளுடன் ஆலோசித்து திருத்தி அமைக்கப்படும்.

• அனைத்து கடலோர பகுதிகளிலும் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

• முப்படை வீரர்களை தேர்வு செய்யும் அக்னிபாத் திட்டம் ரத்து செய்யப்படும்.

• எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கட்சி தாவினால் தானே பதவி இழக்கும் வகையில் சட்டத் திருத்தம்.

• ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் கொண்டு வரப்படாது .

• அனைத்து விசாரணை அமைப்புகளும் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றங்களின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும்.

• பா.ஜ.க. ஆட்சியின் அனைத்து மக்கள் விரோத சட்டங்களிலும் திருத்தம் செய்யப்படும்.

• பணமதிப்பழிப்பு, ரபேல் ஒப்பந்தம், பெகாசஸ் முறைகேடு தொடர்பாக விசாரணை.

• பா.ஜ.க. ஆட்சியில் வெளிநாடுகளுக்கு குற்றவாளிகள் தப்பிச்சென்றது குறித்து விசாரணை நடத்தப்படும்.

• பா.ஜ.க.வுக்கு மாறியதால் ஊழல் வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மீதான வழக்கு மீண்டும் விசாரிக்கப்படும்.

• தேர்தல் பத்திர முறைகேடு, பி.எம். கேர்ஸ், ராணுவ ஒப்பந்த ஊழல் குறித்து விசாரணை நடத்தப்படும்.

• LGBTQIA நலச் சங்கங்கள் அடையாளம் காணப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதற்கான சட்டம் இயற்றப்படும்.

• LGBT சமூகத்தினரின் திருமணத்தை அங்கீகரிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படும்.

• பொதுப்பட்டியலில் உள்ள பல துறைகளை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவது குறித்து ஆய்வு செய்யப்படும்.

• செஸ் வரி வசூலில் மாநிலங்களை ஏமாற்றும் பாஜகவின் சட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

• மீனவர்களுக்காக கூட்டுறவு வங்கிகள் அமைக்கப்படும், மீன் பிடி துறைமுகங்கள் மேம்படுத்தப்படும்.

• தனிநபர் வருமான வரி ஒரே விதமாக நிலையாக இருக்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்படும்.

• வேளாண் இடு பொருட்களின் மீது ஜிஎஸ்டி வரி விதிக்கப்படாது.

• பெண்களுக்கான ஊதியத்தில் பாகுபாடு காட்டப்படுவதை தவிர்க்க ‘ஒரே வேலை, ஒரே ஊதியம்’ திட்டம்.

• பணியில் இருக்கும்போது தூய்மை பணியாளர்கள் உயிரிழந்தால் ரூ.30 லட்சம் வழங்கப்படும்.

• விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விற்பதற்காக நேரடி சந்தைகள் அமைக்கப்படும்.

• திருமணம், வாரிசுரிமை, தத்தெடுத்தலில் ஆண்கள், பெண்களுக்கு இடையேயான பாகுபாடுகள் களையப்படும்.

• ஊடக சுதந்திரத்தை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும்.

• மக்களின் உணவு, உடை, காதல் திருமணம் மற்றும் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் பயணம் செய்து வசிப்பது போன்ற தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடமாட்டோம்.

• ஒவ்வொரு மாவட்டத்திலும் வேளாண் கல்லூரி, கால்நடை கல்லூரி, மருத்துவ கல்லூரி அமைக்கப்படும்.

• நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்பேத்கர் நூலகங்கள் அமைக்கப்படும்.

• வெறுப்புப் பேச்சு, மதமோதல்கள், வெறுப்பு குற்றங்களை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

## தலையங்கம்

# வீழ்த்த முடியாத கட்சியா பாஜக?

நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு கூட இன்னும் நடக்கவில்லை. ஆனால் மோடி மூன்றாவது முறையாக மோடி பிரதமராகி விட்டார் என்று மட்டும்தான் இன்னும் சில ஊடகங்கள் எழுதவில்லை. ரஷ்யாவை, சீனாவைப் போல ஒற்றைக் கட்சி ஆட்சிமுறைக்கு இந்தியாவும் வந்துவிட்டதோ எனத் தோன்ற வைக்கும் அளவுக்கு சில ஊடகங்கள் பாஜக செய்திகளை அணுகிக் கொண்டிருக்கின்றன. கடைசியாக நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், புதிய அரசின் முதல் 100 நாட்களுக்கான திட்டங்களை தயாரிக்குமாறு கேபினட் அமைச்சர்களுக்கு மோடி உத்தரவிட்டதாக சில ஊடகங்களில் செய்தி வெளியாகியிருக்கிறது.

இன்னும் சில ஊடகங்களோ ஒரு படி மேலே போய், மீண்டும் மோடி பிரதமராக பதவியேற்கும்போது குறைவான எண்ணிக்கையிலான அமைச்சகங்களே இருக்கும் என்று எழுதியிருக்கின்றன. பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்கள் மோடிதான் வெற்றியாளர் என்று கருத்துக் கணித்துவிட்டன. எதிர்க்கட்சிகளால் நாடு தழுவிய அளவில் இந்தியா கூட்டணி பலமாக அமைக்கப்பட்டுள்ள போதிலும், கண்ணுக்கு எட்டிய வரை மோடிக்கு எதிரியே இல்லை என்று தேசிய ஊடகங்கள் பாஜகவின் குரலை எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

கள நிலவரத்துக்கும் ஊடகங்களின் கருத்துக் கணிப்புக்கும் இடையிலான வித்தியாசம் மலையளவுக்கு இருக்கிறது என்பதை 07.04.2024 அன்று டெகான் கிரானிக்கல் பத்திரிகையில், ஆய்வாளர் பர்சா வெங்கடேசுவர ராவ். எழுதி வெளியாகியிருக்கிற கட்டுரை மிகத் துல்லியமாக படம் பிடிக்கிறது. தமிழ்நாடு, ஆந்திரா, மேற்கு வங்கம், ஒடிசா, மகாராஷ்டிரா, மிசோரம், நாகாலாந்து, மேகாலயா, டெல்லி, பஞ்சாபில் மாநில கட்சிகளே இப்போதும் ஆதிக்கம் செலுத்துகின்றன. பாஜக ஆட்சியில் இருக்கும் பல மாநிலங்களிலும் வாழ்வாதாரச் சிக்கல்களே மேலோங்கி இருக்கின்றன. கர்நாடகாவிலும், குஜராத்திலும் பாஜகவின் உட்கட்சிப் பூசல் தேர்தல் பணிகளை நிலைகுலைய வைத்திருக்கிறது.

பாட்னாவில் சமீபத்தில் நடந்த இந்தியா கூட்டணியின் எழுச்சி மிகு கூட்டம், தூங்கச் செல்லும் போது ஒரு அணியிலும், கண் விழிக்கும்போது ஒரு அணியிலும் இருக்கும் பீகாரின் நிதிஷ் குமாரை மக்கள் இனி நம்பப்போவதில்லை என்பதற்கான அச்சாரமாக அமைந்தது. சமாஜ்வாதி- காங்கிரஸ் கூட்டணி உ.பி.-யில் பாஜகவுக்கு நெருக்கடியை ஏற்படுத்த தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆனால் இதையெல்லாம் மறைத்துவிட்டு பாஜகவுக்கு எதிரிகளே இல்லை என சாளரம் வீசுகிறது சில ஊடகங்கள்.

அப்படியொன்றும் வீழ்த்தவே முடியாத கட்சியில்லை பாஜக. 2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக பெற்ற வாக்கு 31.34%. 2019 தேர்தலில் 37.7% வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இது ஒன்றும் வியக்கத்தக்க எண்ணிக்கை இல்லை. 1971 தேர்தலில் காங்கிரஸ் கட்சி 43.68% வாக்குகளையும், 353 இடங்களையும் பெற்றது. 1980-இல் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது 42.69% வாக்குகளையும் 352 இடங்களையும் பெற்றிருந்தது. அத்தகைய பலம் மிக்க காங்கிரஸ் கட்சியே வீழ்ந்திருக்கிறது என்பதுதான் வரலாறு. அதுவும் இல்லாமல், பாஜக இதுவரை ஒருமுறை கூட இந்த எண்ணிக்கையை பெற்றதில்லை. எனவே மோடியை மன்னராக சித்தரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று காட்டமாக எழுதியிருக்கிறார் ஆய்வாளர் பர்சா வெங்கடேசுவர ராவ்.

இன்னும் முதற்கட்ட வாக்குப்பதிவுக்கு ஒரு வாரத்துக்கும் குறைவான நாட்களே இருக்கின்றன. தேர்தல் களத்தில் மோடியின் புகழ் எங்கும் ஒலிக்கவில்லை. விவசாயிகள் பாஜகவினரை ஓட்டு கேட்க அனுமதிக்காமல் விரட்டியிருக்கிறார்கள். பாஜகவின் ஊழல்கள்தான் பேசுபொருளாக இருக்கின்றன. வேலைவாய்ப்பின்மைக்கு எதிரான குரல்கள் கேட்கின்றன. இவற்றோடு கூடுதலாக, காங்கிரஸ் கட்சியின் சமூக நீதி 'தேர்தல் அறிக்கை' கவனிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இவற்றைத் தாண்டி பாஜக 400 இடங்களுக்கு மேல் பிடிக்கும் என்ற கணிப்புகள் வெறும் கானல் நீர். வெற்றுக் கருத்துத் திணிப்புகளே அவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

# வினா விடை

• *காங்கிரஸ் கட்சி தேர்தல் அறிக்கை முஸ்லீம் லீக் தேர்தல் அறிக்கைப் போல் உள்ளது*
*- மோடி*

சமூகநீதி – பெண்ணுரிமை – மாநில உரிமைகள் எல்லாம் இஸ்லாமியர்களுக்கானது. பெட்ரோல், டீசல், சிலிண்டர், டோல்கேட் கட்டண உயர்வுதான் இந்துக்களுக்கானது.

• *பாமக வேட்பாளர் தங்கர்பச்சான் கிளி ஜோசியம் பார்த்து தனது வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்டார்*
*- செய்தி*

தாமதிக்காதீங்க… உடனே தேர்தல் ஆணையத்துக்கு தகவல் சொல்லி வெற்றியை அறிவிக்க சொல்லுங்க..

• *திமுக சீரழித்த தமிழர் பண்பாட்டை நாங்கள் மீட்க வந்திருக்கிறோம்*
*- ஜெ.பி.நட்டா*

யாரது, மதுரையில் எய்ம்ஸ் கட்டடப் பணிகள் 90 சதவீதம் முடிந்து விட்டது என்ற சொன்ன அந்த நட்டா தானே. அடுத்தமுறை தமிழ்நாட்டுக்கு வரும்போது சமஸ்கிருதத்தில் பேசி தமிழர் பண்பாட்டை மீட்க போராடுங்க ஜீ..

• *உடல்நிலை காரணமாக பாஜகவுக்கு பிரச்சாரம் செய்ய முடியாது, நட்டாவுக்கு குஷ்பு கடிதம்*

இதுக்கு போய் கடிதம் எழுதி பத்திரிகையிலும் செய்தியாக்கிட்டிங்க.. நம்புரோம் நீங்க கட்சியில் சுமூகமான உறவில் தான் இருக்கீங்க..

• *ரூ,4 கோடி பறிமுதல் செய்யப்பட்ட பிறகும் நயினார் நாகேந்திரன் மீது அமலாக்கத்துறை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை*
*- தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை*

இப்படியெல்லாம் கேட்காதீங்க.. பணத்தை எனக்கு அனுப்பியதே செல்வப்பெருந்தகை தான் என்று நயினாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கி அமலாக்கத்துறை உங்களையே புடிச்சு உள்ள தள்ளிடும். எச்சரிக்கை!

• *பாஜகவோடு கூட்டணி வைத்து எந்த பயனும் இல்லை*
*- எடப்பாடி பழனிச்சாமி*

நியாயம் தான்.. உங்களுக்குத்தான் இப்போது ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லையே!

• *இந்தியா கூட்டணிக்கு பிரதமர் யார் என்பதை இதுவரை கூறவில்லை*
*- எடப்பாடி பழனிச்சாமி*

எங்களது அதிமுக கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதில் தெளிவாக இருக்கிறோம். அதை இப்போதே சொல்ல வேண்டும் என்று மிரட்டிப் பார்க்காதீர். ஒற்றை விரலால் ஓங்கி அடித்துப் பிறகு கூறுவோம்.

# தமிழ்நாடு மாடல் வளர்ச்சி மாடல்



*தேர்தல் கள ஆய்வுக்காக தமிழ்நாடு வந்திருந்த மூத்த ஊடகவியலாளர் ராஜ்தீப் சர்தேசாய் எக்ஸ் தளத்தில் இட்டிருக்கும் பதிவுகள் கவனம் பெற்றுள்ளன. "தமிழ்நாடு அரசியல் எப்போதுமே என்னை ஈர்த்திருக்கிறது. ஏனெனில் தமிழ்நாடு தனக்கென ஒரு தனி வழி அமைத்து, அதில் முன்னேறி வந்திருக்கிறது. இந்தியா கொண்டிருக்கும் பன்மைத்துவமே அதன் வலிமை. தமிழ்நாடு அதற்கு நல்ல உதாரணம். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான பரந்த கூட்டணியை வீழ்த்துவது எளிதல்ல. யார் எதிர்க்கட்சி என்பதற்கு இங்கே போட்டி நடக்கிறது" என்று பதிவிட்டுள்ளார்.*

*மேலும், "ஒன்றிய பாஜக அரசின் ஜிஎஸ்டி, பணமதிப்பழிப்பு நடவடிக்கைகளால் கோவை 30% சிறு, குறு நிறுவனங்கள் மூடுவிழா கண்டுவிட்டன. தொழில் நிறுவனங்கள் வைத்திருந்த சிலர் இப்போது ஆட்டோ ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். பெரிய நிறுவனங்கள் மட்டுமே சிறிய அளவிலான ஆதாயம் பெற்றுள்ளன.*

*தமிழ்நாட்டு களத்தை ஆய்வு செய்ததில் நான் புரிந்துகொண்ட விஷயம் இதுதான். குஜராத் மாடலைப் பற்றி பேசும் நாம், சமூகநீதி மற்றும் வளர்ச்சிகொண்ட தமிழ்நாட்டு மாடலைப் பற்றி எப்போது பேசப்போகிறோம்? இந்தியா முழுவதும் பணிபுரியும் பெண்களில் தமிழ்நாட்டில் மட்டும் 43% இருக்கிறார்கள். அதிகாரம் பெற்ற இப்பெண்கள் சிறந்த தமிழ்நாடு மற்றும் இந்தியாவை உருவாக்குகிறார்கள். தமிழ்நாடு எட்டியிருக்கும் பல சாதனைகளில் இதுவும் ஒன்று" என்றும் பதிவிட்டுக்கிறார்.*

## ஈரோடு இரத்தினசாமியின் தாயார் காலமானார்!



*ஈரோடு : கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமியின் தாயார் மருதாம்பாள் (வயது 90) 08.04.2024 அன்று வயது மூப்பின் காரணமாக முடிவெய்தினார்.*

*ஈரோடு முத்தூர் கார்வழி ரைஸ்மில் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி மற்றும் கழகத் தோழர்கள் இறுதி மரியாதை செலுத்தினார்கள். பின்னர் 09.04.2024 அன்று அம்மையாரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.*

## தயாநிதி மாறன் பெரியார் சிலைக்கு மரியாதை!




*தென் சென்னை மக்களவைத் தொகுதி வேட்பாளர் தயாநிதிமாறன் 09.04.2024 அன்று திருவல்லிக்கேணி பகுதியில் வாக்கு சேகரிக்க வருகைதந்தார். அவருக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி பயனாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.*

*பின்னர் கழக படிப்பகம் முன்பு அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.*

# பாஜகவுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது? (2)



**விடுதலை இராசேந்திரன்**

### வேலை இல்லாத் திண்டாட்டம் மிக மோசம்

வேலைவாய்ப்பு ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை தருவேன் என்று உறுதி கூறி பதவிக்கு வந்தார் மோடி. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை? ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்டுவோம். இஸ்ரேல் நாடு இப்பொழுது காசா மக்கள் மீது மிகப்பெரிய போரை தொடுத்துக் கொண்டிருக்கிறது. ஏராளமானவர்கள் அங்கே உயிர் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேல் ஜியோனிசம் என்ற கொள்கையை பின்பற்றுகிறது. இது இஸ்லாமிய வெறுப்பை அடிப்படையாகக் கொண்டது. மோடி ஆட்சி பேசுகிற இந்து ராஷ்டிரமும் இஸ்லாமிய வெறுப்பை அடிப்படையாகக் கொண்டது. எனவே சித்தாந்த ரீதியில் இருவரும் ஒரே தளத்தில் பயணிக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் அங்கே கடுமையான போர் நடந்து கொண்டிருக்கும்போது இஸ்ரேலுக்கு இந்தியாவில் இருந்து வேலைக்கு ஆட்களை அனுப்புகிற முயற்சியில் ஒன்றிய ஆட்சி ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக இஸ்ரேல் நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சரும் இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சரும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கிக் கொண்டு 45 ஆயிரம் இந்தியர்களை இஸ்ரேலுக்கு வேலைக்கு அனுப்புவது என்று முடிவுக்கு வந்தார்கள்.

போர் தொடங்கியதற்கு பிறகு இஸ்ரேல் பல பாலஸ்தீனியர்களை வேலையில் இருந்து வெளியேற்றி விட்டது. அவர்கள் எந்த நேரத்திலும் தங்கள் மீது தாக்குதலை தொடுப்பார்கள் என்ற அச்சத்தில் இந்த வெளியேற்றம் நடந்தது. இந்த நிலையில் அங்கே வேலைவாய்ப்புகள் அதிகமாக இருந்த காரணத்தினால் நாங்கள் உங்களுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்புகிறோம் என்று இந்தியா முன்வந்து இந்தியாவினுடைய திறன் வளர்ச்சி அமைப்பு அதாவது ஸ்கில் டெவலப்மென்ட் அமைப்பு இந்த வேலைக்கான ஆட்களை தேர்வு செய்கின்ற உரிமையை கையில் எடுத்துக் கொண்டது. வேலைக்கான ஆட்களை தேர்வு செய்கின்ற அந்த அலுவலகத்தில் பிரதமர் மோடியின் படம் பெரிதாக மாட்டப்பட்டு வேலைக்கு வருகின்ற "இளைஞர்களிடம் போர் நடக்கிறது என்பதால் உங்களுக்கு எந்த அச்சமும் வேண்டாம் அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இந்தியா உங்களுக்கு வழங்கும்" என்று கூறி அவர்களை இஸ்ரேல் நாட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே போர் நடக்கின்ற இடத்தில் அவர்கள் சிக்கிக் கொண்டு நாங்கள் மீண்டும் இந்தியாவுக்கு வரவேண்டும் என்று மனு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆக போர் நடக்கின்ற ஒரு சூழ்நிலையில் உயிருக்கு ஆபத்தாக இருந்தாலும் கூட, நாங்கள் இஸ்ரேல் நாட்டுக்கு வேலைக்கு போகிறோம் என்று இங்கு இருக்கிற இளைஞர்கள் துணிகிறார்கள். அதற்கு விதிகளை திருத்தி நீங்கள் தாராளமாகப் போய் வாருங்கள் என்று இந்திய அரசே அனுப்பி வைக்கிற அளவுக்கு தான் இங்கே வேலை இல்லாத் திண்டாட்டம் இருக்கிறது.

கிராமப்புற வேலை திட்டத்தின் கீழ் பலர் சலுகைகளை பெற்று ஓரளவுக்கு நிதிப் புழக்கம் கிராமப்புறத்தில் இருந்திருக்கிறது. அந்தத் திட்டத்திற்கான நிதியை நிதிநிலை அறிக்கையில் கணிசமாக குறைத்து மாநில அரசுகளுக்கு இந்த திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய நிதியையும் கொடுக்காமல் தடுத்து நிறுத்தி வைத்திருக்கிற காரணத்தினால் கிராமப்புற வேலைத் திட்டம் கடுமையாக பாதிக்கப்பட்டு விட்டது. கிராமப்புற வேலை திட்டத்தில் வேலை செய்கிறவர்கள் ஆதார் அடையாள அட்டையோடு தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்கிற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதன் காரணமாக ஏற்கனவே வேலைக்குப் போய்க் கொண்டிருந்த பெரும்பாலானவர்களை வேலையில் இருந்து நிற்கச் செய்கின்ற ஒரு முடிவையும் இந்திய அரசு செய்து அதிலும் வேலை வாய்ப்பை குறைத்து விட்டது.

நீதிமன்றங்கள் அவ்வப்போது பல பிரச்சனைகளில் இந்த ஆட்சியை குட்டிக் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. அதுதான் இன்றைக்கு நீதிமன்றத்தின் மீது அவர்களுக்கு மிகப்பெரிய கோபத்தை உருவாக்கி இருக்கிறது. ராகுல் காந்தி பதவி நீக்கப்பட்டதற்குப் பிறகு அதைத் தவறு என்று சொன்னது உச்ச நீதிமன்றம். தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர்கள் தான் நியமிக்கப்படும் ஆளுநர்களை விட அதிகாரம் பெற்றவர்கள் என்று டெல்லி யூனியன் பிரதேசம் தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. அதற்குப் பிறகு அரசு, சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டு வந்து ஆளுநர்களுக்குத்தான் அதிகாரம் என்று அதை அவர்கள் மாற்றி அமைத்தார்கள். அதற்குப் பிறகு மாநிலங்களவையில் தலையிட்ட ஆளுநர்களைக் கண்டித்து குறிப்பாக, பஞ்சாப் மாநில ஆட்சி தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், ஆளுநர்களைவிட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்குத்தான் அதிகாரம் உண்டு, ஆளுநர்கள் மாநில அரசுகளின் நடவடிக்கைகளில் குறிக்கிடமுடியாது என்று நீதிமன்றம் திட்டவட்டமாக அப்போதும் ஒரு தீர்ப்பை வழங்கியது.

### தேர்தல் பத்திர ஊழல்

தேர்தல் பத்திரம் என்ற ஒரு முறையைக் கொண்டுவந்து அமலாக்கத்துறையை வைத்து மிரட்டி பல நிறுவனங்களில் சோதனைகள் நடத்தி அதன் மூலம் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை தங்கள் தேர்தல் நிதியாக வசூலித்துக் கொண்டிருந்தது பாரதிய ஜனதா கட்சி ஆட்சி. அதில் நடந்த மிகப்பெரிய ஊழல்கள் இப்பொழுது அம்பலமாகி வருகின்றன. தேர்தல் பத்திரங்களின் வாயிலாக நன்கொடைகள் பெறுவதற்காக அமலாக்கத்துறை பல நிறுவனங்களில் சோதனைகள் நடத்தி மிரட்டியிருக்கிறது. அதற்குப் பிறகு தேர்தல் பத்திரங்கள் வாயிலாக பணம் வாங்கியிருக்கிறது. பணம் வாங்கிய நிறுவனங்களுக்கு ஏராளமான சலுகைகளை ஒன்றிய ஆட்சி வழங்கியிருக்கிறது. 170 நிறுவனங்கள் இதை போல் சலுகைகள் பெற்று இருக்கின்றன.

எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்த பல மாநிலங்களில் குறுக்கு வழியில் ஆட்சியை கலைத்தார்கள். மேகாலயா சட்டமன்றத்தில் இரண்டு உறுப்பினர்களை மட்டுமே கொண்ட பாஜக ஆட்சி ஆட்சியை கவிழ்த்து, எம்எல்ஏக்களை விலைக்கு வாங்கி, ஆட்சியை தன்னுடைய பிடிக்குள் கொண்டு வந்தது. மேகாலயா மட்டுமல்ல, கோவா, சிக்கிம், கர்நாடகா, மத்திய பிரதேசம், புதுச்சேரி, மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை வாரி இறைத்து, சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, ஆட்சிக் கவிழ்ப்பு செய்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியை சிதைத்தார்கள். இவர்கள் இப்போது என்ன சொல்கிறார்கள்? இந்த தேசம் மெஜாரிட்டி மக்களான இந்துக்களால் ஆளப்படுகிற ஒரு தேசம் என்று சொல்கிறார்கள். எனவே இது இந்து தேசமாக இருக்க வேண்டும் என்று வாதிடுகிறார்கள் மெஜாரிட்டி என்பதை இந்து மதத்தோடு இணைத்து அவர்கள் பேசுகிறார்கள்.

### இந்து தேசியம் என்ற புனைவு

மெஜாரிட்டி என்பது இந்து மதத்தோடு இணைக்கப்படுகிறது. தேசம் தேசியம் என்பதும் இந்து மதத்தோடு இணைக்கப்படுகிறது. தேசத்தின் அடையாளமாக இந்து என்கிற மதச்சார்பை பூசுவதை நாம் ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. இது குறித்து அண்மையில் வெளி வந்திருக்கிற ஒரு நூலில் ரொமிலா தாபர், தேசம் தேசபக்தி என்கிற கட்டமைப்பு இங்கே முறைகேடாக செயல்படுத்தப்படுகிறது, என்பதை விரிவாக விளக்கி இருக்கிறார். ஒரு ஜனநாயகத்தில் மெஜாரிட்டியை வாக்காளர்களாகிய குடிமக்கள் தேர்தெடுக்கிறார்கள். இந்து குடிமக்கள் யாரை தேர்ந்தெடுக்கிறார்களோ அவர்களுக்கான ஆட்சி என்று அரசியல் சட்டம் கூறவில்லை. குடிமக்கள் என்று சொன்னால் அவர்கள் அனைத்து மதத்தையும் சேர்ந்தவர்களாகவும், மதத்திற்கு அப்பாற்பட்டவர்கமாகவும் இருக்கலாம். குடிமக்கள் என்பதற்கு இந்துக்கள் என்று இவர்கள் அடையாளம் செலுத்துவது அரசியல் சாசன சட்டத்தின் நோக்கத்தை சிதைப்பதாகும். ஒரு ஜனநாயக கட்டமைப்பில் மெஜாரிட்டி மைனாரிட்டிக்கு அடிப்படைக் கருத்தியல் 'ஈக்குவாலிட்டி' (Equality) என்பதே!

எனவே, பாஜக என்கிற இந்த மதவாத, ஜனநாயகக் கட்டமைப்புகளை சிதைக்கிற, மக்கள் உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கின்ற, நாட்டின் மாநிலங்களின் உரிமைகளைப் பறித்துக் கொண்டிருக்கின்ற ஒரு ஆட்சிக்கு விடை கொடுக்க வேண்டும். அதற்கு இந்தியா கூட்டணியை மக்கள் ஆதரிக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கு வரலாறு நம் மீது சுமத்தி இருக்கின்ற பொறுப்பும் கடமையும் ஆகும்.

## தேர்தல் பத்திரங்களில் தோண்டத் தோண்ட ஊழல்!

மோடி அரசு கொண்டு வந்த தேர்தல் பத்திரங்கள் என்ற மெகா மோசடித் திட்டத்தைத் தோண்டத் தோண்ட ஊழல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. உச்சநீதிமன்றத்தின் அதிரடித் தீர்ப்பால் தேர்தல் பத்திரங்கள் முறை ஒழிக்கப்பட்டு, ரகசியங்கள் வெளியிடப்பட்டன. மொத்த தேர்தல் பத்திரங்களில் பாஜகவுக்கு மட்டுமே ரூ.8250 கோடி கிடைத்தது தெரியவந்தது. அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ போன்ற விசாரணை அமைப்புகளை வைத்து தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறித்ததும் எஸ்.பி.ஐ. தரவுகளை ஆய்வு செய்ததில் அம்பலமானது.

இந்த நிலையில், குஜராத்தில் பட்டியல் சமூக விவசாயியின் குடும்பத்திடம் நிலம் வாங்குவதுபோல் ஏமாற்றி , பாஜவுக்கு ரூ.10 கோடி நிதியை தேர்தல் பத்திரங்கள் மூலம் கொடுத்திருப்பது அம்பலமாகியுள்ளது. அதானி குழுமத்துக்கு நெருக்கமான வெல்ஸ்பன் நிறுவனம் இந்த மோசடியைச் செய்திருக்கிறது. அங்குள்ள கட்ச் மாவட்டத்தின் அஞ்சார் பகுதியில் புதிய தொழில் தொடங்க பல நூறு ஏக்கர் நிலங்களை வாங்கியது வெல்ஸ்பன் நிறுவனம். இதில் பட்டியல் சமூக விவசாயி ஹரேஷ் சவகரா என்பவரின் 11 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.16.61 கோடிக்கு நிலம் விற்பனையானது. இதில், ரூ.2.80 கோடி முன்பணமாக தரப்பட, மீதமுள்ள ரூ.13.81 கோடி ஹரேஷ் சவகரா மற்றும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரின் வங்கி கணக்குக்கு அனுப்பப்பட்டது.

இந்த நிலையில், மொத்தம் ரூ.11 கோடிக்கு சவகரா குடும்பம் சார்பில் தேர்தல் பத்திரங்கள் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் வாங்கப்பட்டன. இதில், ரூ.10 கோடியை பாஜவும், ரூ.1 கோடியை சிவசேனா கட்சியும் பணமாக்கி உள்ளன. தேர்தல் பத்திர திட்ட விவரங்களை ஆய்வு செய்த பத்திரிகையாளர்கள் சிலர் இது பற்றி ஹரேஷ் சவகராவை சந்தித்து விளக்கம் கேட்ட பின்னர்தான், தாங்கள் ஏமாற்றப்பட்டதே தெரிய வந்திருக்கிறது. அதன்பிறகு அஞ்சார் போலீஸ் நிலையத்தில் புகார் மனு ஒன்றை கொடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் பத்திரிகையில் அளித்திருக்கும் பேட்டி: "எங்கள் குடும்பத்துக்கு மொத்தம் ரூ.16.61 கோடி கிடைத்ததால் மகிழ்ச்சியாக இருந்தோம். அப்போது, என்னையும் என் தந்தையையும் வெல்ஸ்பன் நிறுவன விருந்தினர் விடுதிக்கு அழைத்து அந்த நிறுவன அதிகாரி மகேந்திர சிங் சோதா பேசினார். அப்போது, நகர பாஜ தலைவர் ரஜினிகாந்த் ஷா உடனிருந்தார். இவ்வளவு பெரிய தொகையை வங்கியில் வைத்திருந்தால் ஐ.டி ரெய்டு வரும் என்று மிரட்டினார். ரெய்டில் இருந்து தப்பிக்க தேர்தல் பத்திரங்களில் முதலீடு செய்யுங்கள், நல்ல லாபம் கிடைக்கும் என்று கூறினார். இதனால், அதற்கு சம்மதித்தோம். இப்போதுதான் நாங்கள் ஏமாற்றப்பட்டது தெரிந்தது. எங்களை ஏமாற்றி பாஜவுக்கு நிதி கொடுக்க வைத்த வெல்ஸ்பன் நிறுவன இயக்குனர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று கூறியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, 11 ஏக்கர் நிலத்துக்கு குஜராத் அரசு முதலில் ரூ-76 கோடியை விலையாக நிர்ணயித்தது. ஆனால், அந்த தொகையை தர வெல்ஸ்பன் நிறுவனம் மறுத்துவிட்டது. ஓராண்டுக்கு பிறகு கட்ச் மாவட்ட சப் கலெக்டர் தனது அதிகார வரம்பை மீறி நிலத்தின் மதிப்பை ரூ.16.61 கோடியாக முறைகேடாக குறைத்ததாக சவகரா குடும்பத்தின் வழக்கறிஞர் புகார் கூறியுள்ளார். வங்கி டெபாசிட் பத்திரத்துக்கும் தேர்தல் பத்திரத்துக்கும் கூட வித்தியாசம் தெரியாத அப்பாவி பட்டியல் சமூகக் குடும்பத்தை அதானிக்கு நெருக்கமான வெல்ஸ்பன் உள்ளூர் பாஜக நிர்வாகிகளோடு சேர்ந்து ஏமாற்றியிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் பத்திரங்கள் விவகாரத்தில் ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா தொடக்கத்தில் இருந்தே பாஜகவை பாதுகாக்கும் நோக்கிலேயே செயல்பட்டு வருகிறது. பல உண்மைகளையும் மறைத்துக் கொண்டிருக்கிறது. கோடக் மஹிந்த்ரா

**தொடர்ச்சி 4ஆம் பக்கம்**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கழகத்தின் தேர்தல் பரப்புரைகள் தீவிரம்

# பாஜகவுக்கு எதிரான பரப்புரைகளுக்கு அமோக ஆதரவு!




**சேலம் :** மேட்டூர் நகரக் கழக சார்பில் “மோடி ஆட்சி தொடரலாமா?” பொதுக்கூட்டம் 06.04.2024 அன்று மேட்டூர் சின்ன பார்க் திடலில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மேட்டூர் நகரத் தலைவர் செ. மார்ட்டின் தலைமை தாங்கினார், கீ.கோ.தேன்மொழி வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தின் தொடக்க நிகழ்வாக பாடகர் கோவன் கலைக் குழுவின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஆசிரியர் செல்வேந்திரனின் இயக்கத்தில் “கலகக்காரன்” நையாண்டி தெருக்கூத்து நாடகம் நடைபெற்றது.

கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கழக சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராஜ், மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, ம.க.இ.க பாடகர் கோவன் ஆகியோர் மோடி ஆட்சி தொடரலாமா? என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார்கள்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

மேட்டூர் நகர தி.வி.க.செயலாளர் சு.குமரப்பா நன்றி கூற கூட்டம் நிறைவடைந்தது.

இதில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மேட்டூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து கழகத் தோழர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**பொள்ளாச்சி :** பொள்ளாச்சி நகர திராவிட இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் இந்தியா கூட்டணியின் பொள்ளாச்சி மக்களவைத் தொகுதி வேட்பாளர் ஈஸ்வரசாமியை ஆதரித்து தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் ஏப்ரல் 07,08 ஆகிய தேதிகளில் பொள்ளாச்சி காந்தி சிலை, ஆனைமலை, பொள்ளாச்சி புதியப் பேருந்து நிலையம் உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.



இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று இந்தியா கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் பொள்ளாச்சி நகர்மன்றத் தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், திராவிட முன்னேற்றக் கழக பொள்ளாச்சி நகரக் கழகச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், ஆனைமலை பேரூராட்சி மன்றத் தலைவர் கலைச்செல்வி, சாந்தலிங்கம், ஆனைமலை ஒன்றியச் செயலாளர் டாக்டர் செந்தில்குமார், திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச்செயலாளர் கா.சு.நாகராசன், கழக நிர்வாகிகள் பொள்ளாச்சி யாழ். வெள்ளிங்கிரி, சபரிகிரி, ஆனந்த், அரிதாசு மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



**சென்னை :** சர்வாதிகாரத்தை வீழ்த்துவோம்! சமூக ஒற்றுமையைக் காப்போம்! என்ற முழக்கத்தோடு ஏப்ரல் 19 அன்று நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் திமுக தலைமையிலான இந்தியா கூட்டணியின் தென் சென்னை மக்களவைத் தொகுதி வெற்றி வேட்பாளர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் மார்ச் 06, 08 ஆகிய தேதிகளில் வேளச்சேரி நேதாஜி சாலை மற்றும் மடிப்பாக்கம் மெயின் ரோடு உள்ளிட்ட இடங்களில் நடைபெற்றது.

மோடியின் பத்தாண்டு கால சர்வாதிகார ஆட்சியை தோலுரிக்கும் அரசியல் நையாண்டி கலை நிகழ்ச்சியை உமாபதி - பொன்ராஜ் - கார்மேகம் குழு பொதுமக்களின் பேராதரவுடன் நடத்தியது.

அதனைத் தொடர்ந்து “இந்தியா கூட்டணி என்பது வெறும் தேர்தல் கூட்டணி அல்ல; அது இந்தியாவின் எதிர்காலத்தை காப்பாற்றும் கூட்டணி” என்பதை வலியுறுத்தி கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், இமானுவேல் துரை, அறிவுமதி, திராவிடர் கழக சோழிங்கநல்லூர் மாவட்டப் பொறுப்பாளர் பாண்டு, ஆகியோர் உரையாற்றினார்கள்..

இக்கூட்டத்தை மடிப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளர் எட்வின் பிரபாகரன் மற்றும் இரண்யா ஆகியோர் ஒருங்கிணைத்தனர். கழகத் தோழர்கள் - பொதுமக்கள் திரளாக பங்கேற்றனர்.



**ஈரோடு :** இந்தியா கூட்டணியின் ஈரோடு மக்களவைத் தொகுதி வேட்பாளர் கே.இ.பிரகாசுக்கு ஆதரவாக திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஈரோடு மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட வெங்கம் பாளையம், காசி பாளையம், ஊஞ்சலூர், கொலாநெல்லி, கருமாண்டம்பாளையம், கீரமடை, கலத்து மின்னம்பாளையம், கொம்பனை புதூர், கருக்கம்பாளையம் காலனி, நடுப்பாளையம், மின்னப்பாளையம், குல விளக்கு, இச்சிப்பாளையம், வளந்தான் கோட்டை, நல்லசெட்டி பாளையம், ஜீவா தெரு, மாரப்பாளையம், சிவகிரி வாரச் சந்தை, அம்மன் கோயில் கைகாட்டி, ஆயக்காடு, அண்ணா நகர், கருக்கம்பாளையம், கொக்கிரிப்பட்டி, விளக்கேத்தி கருக்கம்பாளையம் உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நடைபெற்றது..

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, திண்டுக்கல் மாக்சிம் கார்க்கி, தேனி ராயன் ஆகியோர் பங்கேற்று இந்தியா கூட்டணிக்கு ஆதரவாக உரையாற்றினார்கள்.

இதில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வரதராஜன், திராவிடர் கழக ஈரோடு மாவட்டக் காப்பாளர் S.V. சண்முகம், சிவகிரி இரத்தினசாமி, கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க நிர்வாகி சண்முகம், திண்டுக்கல் மாவட்டத் தோழர்கள் கபாலி, பெரியார், தங்கமுத்து, அருண் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### 3ம் பக்க தொடர்ச்சி

குழுமம் 130 கோடி ரூபாய் மதிப்பிலான தேர்தல் பத்திரங்களை வாங்கியதாகக் கணக்குத் தாக்கல் செய்திருக்கிறது. ஆனால் எஸ்பிஐ வெளியிட்ட விவரங்களில் 60 கோடி ரூபாய் மதிப்பிலான பத்திரங்கள் குறித்த தகவல்கள் மட்டுமே உள்ளன. மீதம், 70 கோடி ரூபாய் குறித்த தகவல்கள் இல்லை.

பூஜ்யம் ரூபாய் கூட இலாபம் இல்லாத மற்றும் இழப்பைச் சந்தித்த நிறுவனங்களும் தேர்தல் பத்திரங்களை வாங்கியுள்ளன. அத்தகைய 33 நிறுவனங்கள் வழங்கிய தேர்தல் பத்திரங்களின் மதிப்பு 576.2 கோடி ரூபாய். இதில் 434.2 கோடி ரூபாய் பாஜகவுக்கு மட்டுமே சென்றுள்ளது. அதாவது இலாபம் ஈட்டாத மற்றும் இழப்பைச் சந்தித்த நிறுவனங்களில் 75% நிறுவனங்கள் பாஜகவுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை வழங்கியுள்ளன. இந்நிறுவனங்கள் மிரட்டப்படாமல் பாஜகவுக்கு நன்கொடை வழங்கியிருக்குமா? அல்லது இலாபத்தை மறைத்து கொள்ளையடிக்கும் நிறுவனங்களிடம் லஞ்சமாக தேர்தல் பத்திரங்கள் மூலம் பாஜக நன்கொடை பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இதிலிருந்து ஊகிக்க முடிகிறது. தேர்தல் பத்திரங்களைத் தோண்ட தோண்ட பாஜகவின் ஊழல்கள் அம்பலமாகிக் கொண்டே உள்ளன. பாஜகவின் இந்த மெகா மோசடியில் சம்மந்தப்பட்ட அனைவரையும் உள்ளடக்கி உரிய நீதி விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமாகிறது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted April 12, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran